**தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 03 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 9,556.69 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 7,465.67 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,091.03 மில்லியன் அதாவது 21.88 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2949.85 | 2704.62 | 245.23 | 8.31 |
| மூலதனம் | 6606.85 | 4761.05 | 1845.05 | 27.94 |
| மொத்தம் | 9556.70 | 7465.67 | 2091.03 | 21.88 |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20-02-01-04 ஆம் வருமானக் குறியீட்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 900 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 767.33 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 85 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | பற்றாக்குறை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20-02-01-04 | 900.00 | 767.33 | 132.67 | 14.74 |

## 2.3 முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 13501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 20.00 | 12.47 | 6.50 | 9.29 | 55.10 | 26.18 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.23 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0019/0016/000 | 0.90 |
| 6000/0000/00/0020/0008/000 | 0.17 |
| 6000/000/00/0018/0067/000 | 0.15 |

| | |
|---|---|
| 6000/000/00/0002/0108/000 | 0.01 |
| | ---------- |
| மொத்தம் | 1.23 |
| | ====== |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 3 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 443.10 மில்லியன் தொகையான முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 26 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 15 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தன.

(இ) குறைநிரப்பு நிதிஏற்பாடாக 3 செலவின விடயங்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 162.2 மில்லியனான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

## 3.3 வருமானக் கணக்குகள்

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.02.01.04 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெருந்தோட்ட கம்பனிகளுக்குச் சொந்தமான 571 தோட்டங்களில் அடிப்படை வசதிகள் போன்ற பொது விடயங்களுக்காக காணி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்டிருந்த காணிகளின் அளவுகளை சரியாக அறிந்து கொள்வதற்காக எல்லை நிர்ணயம் தொடர்பான உறுதிப்படுத்தும் சான்றுகள் அமைச்சிடம் காணப்படவில்லை.

(ஆ) அகரபத்தன, உடபுஸ்ஸல்லாவ மற்றும் அல்கடுவ ஆகிய 3 கம்பனிகளுக்கு சொந்தமான 45 தோட்டங்களுக்கு 1992 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் வருடாந்த வரி வருமானம் காலாண்டு அடிப்படையில் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும், ஹப்புகஸ்தன்ன, எல்பிட்டிய, சிலாபம், குருணாகல் பெருந்தோட்டக் கம்பனிகளில் 2017/2016, 2016/2015 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கும் போது நிர்ணயிக்கப்பட்ட திகதியை விஞ்சி 01 மாதம் முதல் 07 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் ரூபா 145,532,511 ஆன வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 13501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,175,543 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 32 வருடங்கள் வரையான காலவீச்சினை எடுத்திருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிதன்மையும்

### 3.5.1 அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2016 திசெம்பர் 19 ஆந் திகதிய 252/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மேலதிகமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சில சொத்துக்கள் பொருட் பதிவேடுகளுக்கு எடுக்கப்படாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் துருசவிய நிதியத்திற்கு 4 மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| | 2009 நவம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானம் | உப குத்தகை வழங்குவதற்கு முன்னர் செழிப்பான பகுதிக்குச் சொந்தமான உரிமையாளரின் அனுமதியைப் பெற வேண்டியிருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் 08 பிராந்திய தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 18 காணித் துண்டுகள் 14 நிறுவனங்களுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் பகுதி உரிமையாளர் என்ற திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 175(2) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 310,241,909 ஆன நீண்டகால குத்தகை வாடகை வருமானத்தை அறவிட முடியாமல் இருந்தது. அவ்வாறே அகலவத்த, கொட்டகல மற்றும் கஹவத்த ஆகிய கம்பனிகளுக்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 144,356,993 ஆன வருமானத்தில் எவ்வித தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பதிவுசெய்யப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட கைதவிர்க்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட 3 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.7 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

02 வெளிநாட்டுக் கடனுதவி செயற்திட்டங்களுக்காக 2016 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 885.9 மில்லியன் நிதிஏற்பாடுகளிலிருந்து ஒரு செயற்திட்டத்திற்காக மட்டும் ரூபா 306.5 மில்லியன் கடனுதவி கிடைத்திருந்தது. மற்றைய செயற்திட்டத்தின் உடன்படிக்கை 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடனுதவி ரூபா 441.4 மில்லியன் நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.8 செயலாற்றல்

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்களைக் கட்டுப்படுத்தல்) சபையின் நோக்கங்களாக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட துண்டாக்களைக் கட்டுப்படுத்துவதாக இருந்த போதிலும், துண்டாக்குவதற்காக கிடைக்கும் விண்ணப்பங்களின் அளவு மற்றும் அதற்காக அங்கீகாரம் வழங்குதல் அதிகரித்துக் காணப்பட்டன.

(ஆ) தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபையின் மூலம் நிபந்தனைகளுடன் காணிகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுகின்றனரா என்பது தொடர்பாக பணிப்பாளர் சபையின் மூலம் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 10/2588/437/010 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்களைக் கட்டுப்படுத்தல்) அதிகாரச்சட்டத்தில் தெங்கு காணிகளுக்காக விதிக்கப்பட்டிருந்த 10 ஏக்கர் எல்லை 5 ஏக்கர் வரை குறைக்கப்பட்டு திருத்தம் செய்வதற்காக 2010 நவம்பர் 10 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் உரிய திருத்தங்களை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி மன்றங்களில் காணிகளைப் பிரிப்பதற்காக அனுமதி வழங்கும் போது அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததா என பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) காணிகளைப் பிரித்தல் அதிகாரச்சட்டத்தின் 12(8) மற்றும் 24 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்களைக் கட்டுப்படுத்தல்) சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் பிரமாணங்கள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தெங்கு தோட்டங்களை துண்டாக்கள் விரைவாக அதிகரித்துச் செல்வது இடம்பெறுவதால் விசேட கவனத்தை செலுத்தி சட்டத்தில் காணப்படும் பலவீனங்களை குறைத்துக்கொள்வதற்கு திருத்தங்கள் உள்ளடக்கப்படும் வகையில் சட்டத்தை திருத்தி பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்கும் காலரீதியான செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி தேயிலை, இறப்பர், தெங்குத் தோட்ட (துண்டாக்களைக் கட்டுப்படுத்தல்) சபையின் 128 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பிரிப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பாக

நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபையின் மூன்று அங்கத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் வெளிக்களத்தில் பரிசோதனை மேற்கொண்டு தீர்மானம் எடுப்பது பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அம்முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெலிகம தென்னை இலைகள் வாடுதல் மற்றும் அழுகுதல் நோய்த் தடுப்பு வேலைத் திட்டத்திற்காக 2008 முதல் 2016 வரை காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நோய்த் தொற்றின் காரணமாக அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 288,683 ஆக இருந்தது. அதற்கான இழப்பீடாக ரூபா 305,414,680 தொகையும் ஏனைய செலவினங்கள் மொத்தம் ரூபா 75,363,281 ஆக இருந்த போதிலும், இந் நோய்க்கு ஈடு கொடுக்கக்கூடிய தரமான ஒரு தென்னை வகையை அறிமுகம் செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ தென்னை பயிர்ச்செய்கை சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) 15 நிர்வாக மாவட்டங்களில் முழுமையாக காணப்படும் 260,000 ஹெக்டேயர் காணியில் 182,284.54 ஹெக்டேயரை அளவிடுவதற்காக இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7 மாவட்டங்களில் 31,435.12 ஹெக்டேயர் காணி (16.6 சதவீதம்) அளவிடப்பட்டிருந்தது. அதற்காக மொத்தம் ரூபா 9.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு 22.7 சதவீதமான அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஒ) மேலும் இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு அளவிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 12 மாவட்டங்களின் 45,726.65 ஹெக்டேயர் காணியின் அளவீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், அளவீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத மாவட்டங்களில் அளவிடப்படாத காணியின் அளவு 52.9 முதல் 91 சதவீதம் வரையாக இருந்தது.

(ஓ) 2008 முதல் 2016 வரை அளவிடுவதற்கு வழங்கப்பட்ட 189,284 ஹெக்டேயர் காணியில் 15,382.93 இற்குரிய வரைபடம் 90 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(ஔ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்குரிய பதினான்கு (14) தோட்டங்களின் அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அத்தோட்டங்களின் அளவீட்டு நடவடிக்கைகளுக்காக நில அளவைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட காணியின் அளவு மற்றும் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் காணப்படும் காணிக்கு இடையே 389.49 ஹெக்டேயார் குறைவொன்று காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு குறைவடைந்த காணி அளவு தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2016-2018 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட உயிர் இரசாயன முறைமையொன்று மூலம் தேயிலை கிளைகளைச் சேதப்படுத்தும் வண்டின் பாதிப்பினைக் குறைப்பதற்கு தந்திரோபாயங்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இரசாயனப் பொருட்களை கலவை செய்வதற்காக HCCP இயந்திரமொன்று (chemical mixing machines) ரூபா 16.05 மில்லியன் செலவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன், கிளைகளை துளைக்கும் வண்டுகளினால் ஏற்படும் சேதங்களை வெற்றிகரமான தீர்வொன்றாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2009 ஜுன் 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபை புறம்பானதொரு

நிறுவனமாக அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபைக்கான ஒரு தலைவர் நியமிக்கப்பட்டுள்ள அதே வேளை அதற்கான சம்பளம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளுக்கான மொத்தம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,093,800 செலவிடப்பட்டிருந்தது.

### 3.10 பெறுகை வழிகாட்டி செயற்பாடுகளிலிருந்து விலகுதல்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக வேறாக்கல் ஒப்பந்தத்துக்குரிய ரூபா 7,247,100 தொகையான மொத்த கிரய மதிப்பீட்டில் மரத்திலான உள்ளக வேறாக்கல் 14.50 சதுர அடியாக இருந்த போதிலும், 21.75 சதுரஅடி வரை மாற்றியதால் மொத்த கிரய மதிப்பீடு 49 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தின் ரூபா 4,354,111 ஆன முதலாவது பட்டியல் கொடுப்பனவுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.11 நட்டங்களும் இழப்புக்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பாக மேவுகை செய்யப்படாத தொகை ரூபா 4,844,050 ஆக இருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 232,500 ஆன களஞ்சிய பொருட்கள் காணாமல் போனமையால் ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பாக பொறுப்பான தரப்பினரிமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் நடாத்திச் செல்லப்படும் அமைச்சரின் அலுவலகத்தில் பாவனைக்கு பொருத்தமான நிலைமையில் இருந்த இடவசதிகளை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 7,143,752 ஆன (வெட் இல்லாமல்) ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற இணையத்தள தொடர்பு முறைமை (ILL) 2014 திசெம்பர் மாதத்தின் போது 1 Mps முதல் 3 Mps வரையும் 2015 ஆம் ஆண்டின் போது 3 Mps முதல் 5 Mps வரையிலும் மிகவும் குறுகிய காலத்தில் அதிகரித்திருந்த போதிலும் இயலளவை அதிகரித்துக் கொள்வதற்கு வகையில் போதியளவு காரணங்கள் காணப்படவில்லை. அதனால் இணையத்தள செலவினம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,684,995 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,530,997 ஆக இருந்தமையால் அது ரூபா 846,002 ஆல் அதாவது 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், முறையற்ற இணையத்தள பாவனையை தவிர்ப்பதற்கு உள்ளக முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014-2015 ஆம் ஆண்டுகளில் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 8 பிராந்திய வலயங்களில் ¼ ஏக்கருக்கும் 1 ஏக்கருக்கும் இடைப்பட்ட தொகுதியில் அடங்குகின்ற அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் மண் பாதுகாப்பு நிவாரணம் வழங்கப்பட்டிருந்தன. இதன் மூலம் தேயிலைக் கொழுந்தின் அளவை 10 மில்லியன் கிலோவினால் அதிகரித்து

அன்னியச் செலாவணியினை ரூபா 9,010 மில்லியனால் அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கை அடைய முடியாமல் போயுள்ளது.

## 3.13 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை குத்தகையாக ரூபா 124,303,707 அறவிடப்பட வேண்டியிருந்தது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 7,501,974 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 116,801,733 அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாகலை பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 4,800,000 தொகையை 2016 ஆம் ஆண்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆகஸ்ட் 01 ஆம் திகதி கற்பகதரு நிதியத்தின் முகாமைத்துவக் குழுவின் முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய வலய சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாவனைக்கு உட்படுத்தப்படாத நிதியினை மீள அறவிட்டு ஆரம்ப நிலை சங்கங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2011 முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 20,895,000 தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2,092,861 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 18,802,139 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) 2005 இன் 31 ஆம் இலக்க கப்ருக நிதி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம், கப்ருவ சங்கங்களுக்குரிய அசையும் அசையாத சொத்துக்கள் அத்திகதியிலிருந்து அமுலாகும் வரை நிதியத்திடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கப்ருக சங்கங்களின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி தொடர்பான அறிக்கை நிதியத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவிற்காக வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்ததன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,250,000 பணம் பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஊ) வாடகைக்கு பெற்றுக்கொண்ட அவசர மின்தடங்களின் போது பயன்படுத்தப்படுகின்ற மின்பிறப்பாக்கியைப் இயக்குவதற்காக காவலாளிக்கு மாதமொன்றுக்கு ரூபா 25,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2016 ஆம் ஆண்டிலும் பெருந்தோட்ட துறையின் விளைச்சலை அதிகரிப்பதற்காக பயிற்சி இரண்டு செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 373,563 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை உரிய உத்தியோகத்தர்கள் பெருந்தோட்ட துறையின் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 24 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 580 | 541 | 39 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 65 | 71 | - | 06 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 | - |
| | மொத்தம் | 682 | 640 | 48 | 06 |